**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP.101 /2022**

**Deposition of P.W.1- ஆன்டணி அருள்ராஜ்**

**Dated: 31.01.2026**

**1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கொத்தனாராக வேலை பார்த்தேன், தற்போது எவ்வித வேலையும் செய்யவில்லை. 08.06.2022ம் தேதி விபத்து நடைபெற்றது. நான் அழகியமண்டபம் – மேக்காமண்டபம் சாலையில் மேற்கிலிருந்து – கிழக்கு நோக்கி வரும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். 1வது எதிர்மனுதாரர் தெற்கிலிருந்து – வடக்கு நோக்கி வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். நான் சாலையை திடீரென கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சாலையின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. 1வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்ட்டது என்றால் சரிதான் நான் 3 தடவையாக 15 நாட்கள் சுஷ்ரூஷா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான் அப்போது என் மனைவி உடன் இருந்து கவனித்து கொண்டிருந்தார் என்றால் உதவிக்கு ஆள் வைத்திருந்தேன். தாசம்மாள் என்பவரை உதவிக்கு வைத்திருந்தேன். அவருக்கு ரூ.30,000/– சம்பளம் கொடுத்தேன். தாசம்மாளுக்கு ரூ.30,000/– சம்பளம் கொடுத்தாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சரியாகி விட்டது என்றால் சரியல்ல. 2022ம் ஆண்டு 8–வது மாதத்திற்கு பிறகு எனக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்டவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தேதிக்கு பின்னர் மருத்துவ சிகிச்சை பெற்றதை காட்டஆவணம்

தாக்கல் செய்யவில்லை. மருத்துவ சிகிச்சைக்காக ரூ.2,50,000/−ற்கு மேல் செலவு செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஒப்பந்த அடிப்படையில் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். ஒப்பந்த வேலை செய்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு கீழ் 20 ஆட்களை வைத்து வேலை பார்த்தேன். வேலையாட்களுக்கு சம்பளம் கொடுத்தை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனது வருமானத்தை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ரூ.25,000/− சம்பாதித்து வந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக் குவருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ பில்களின் அடிப்படையில் தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஊனச்சான்றில் ஊன சதவீதம் அதிகபடியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதிகபடியான இழப்பிடு கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனு முதல்விசாரைணயில் கூறியுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

<u>3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1வது எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1வது எதிர்மனுதாரர் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதால் 3வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் சாலையை கடக்கும் போது விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் 3வது எதிர்மனுதாரால் நஷ்டஈடு

கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்த வேலை செய்வதற்கான உரிமம் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. கொத்தனார் வேலை செய்ததை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எனக்கு எவ்வித வேலையும், வருமானமும் கிடையாது என்றால் சரியல்ல. எனக்கு எவ்வித நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள அதிகபடியான இழப்பீடும் அதிக வட்டியும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3வது எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.